egistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol 43 — No. 7

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 43 | சாதாரண ஆடி 1970 ஜுலை | இதழ் 7

உள்ளுறை பக்கம்

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை–4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 26-7-70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டு விழா, ஆங்கில சைவசித்தாந்த முதலியன பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லாரும் அவசியம் வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

(செயலாளர்)

"ருக்குமணி குக்கர்" திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் சார்பில் 7—7—70 செவ்வாய் மாலை திருமயிலை கபாலீச்சரத்தில் திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ, பி. டி. அவர்கள் "மாணிக்கவாசகர்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

நூலகர், ஊராட்சி மன்ற நூலகம், திருவள்ளுவர் பூங்கா, புன்செய்ப் புளியம்பட்டி, அஞ்சல், கோபிவட்டம், கோவை மாவட்டம் அவர்கள் நம் சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆடித்திங்கள் சிறப்பு நாள்கள்

11	(27-7-70)	கார்த்திகை	— மூர்த்தி நாயனார் விழா
,,		,,	— புகழ்ச்சோழ நாயனார் விழா
14	(30-7-70)	திருவாதிரை	— கூற்றுவ நாயனார் விழா
23	(8-8-70)	சித்திரை	— பெருமிழலைக்குறும்ப நாயனார் விழா
24	(9-8-70)	சுவாதி	— சுந்தரமூர்த்தி நாயனார் விழா
,,		,,	— சேரமான் பெருமாள் நாயனார் விழா
27	(12-8-70)	கேட்டை	— கலிய நாயனார் விழா
,,		,,	— கோட்புலி நாயனார் விழா

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைடள் நாடு.

மலர் 43	சாதாரண ஞு ஆடி ஜூலை 1970	இதழ் 7

திருமுறைப் பகுதி

திரு எழு கூற்றிருக்கை

(ஆசிரியர்)

எழு கூற்றிருக்கை என்பது எழு கூறுகள் முறையாக அமையும்படி செய்யப்பெறுகிற சித்திரக்கவி என்று பொருள்படும். மிக முயன்று செய்கின்ற கவியாதலால், மிறைக்கவி என்னவும் படும். இது ஆசிரியப்பாவில் ஒன்று என்னும் எண்ணுப் பெயரில் தொடங்கி, ஒவ் வொன்ருய்ப் படிப்படியாக ஏறியும் இறங்கியும் ஒன்று வரையில் குறைந்தும் இவ்வாறு ஒன்றுமுதல் ஏழுவரையில் எண்ணுப் பெயர்கள் அமையுமாறு பாடப்படும் செய்யுள் வகை. இதன் இலக்கணம் யாப்பருங்கல விருத்தியுரை காரரும், மாறனலங்கார முடையாரும் கூறுகிருர்கள்.

'எழு கூற்றிருக்கையாவது, ஏழறையாக்கி முறையானே குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியான் வழுவாமை ஒன்று முதலாக ஏழிறுதியாக முறையானே பாடுவது' என்பர் யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியர். "செய்யுளகத்து எண்ணப்பட்ட ஒன் றென்னுமெண் ஒன்று முதலாக ஒரேழிருக நிகழ்ந்தவெண் களைப் பதினுலு நிலந்தொறும் மீள வெண்ணுவதொன் ருகும் எழுகூற்றிருக்கை யென்றவாறு...அங்ஙனம் என்

ணப்படும் எண்கள் தாம் இரதத்திற் பந்திக்குமிடத்து மையத்திற் பத்தியிரண்டு பத்தயாய்க் கீறி வலமே யிடமே கடத்தலைத்தரும் பகுதியில் மையத்திலொன்று பன்முன்றாகவும் அதனயலிருபத்தியிலிரண்டும் பன்னிரண்டாகவும் ஒழிந்த மூன்று முதலிய வெண்ணும் பத்திதோறு மிரண்டு குறைந்தேமென்னுந் தொகை பொருந்தி முதலே நின்ற ஒன்றில் வந்து முடியுமென்றவாறு'' என்று மாறனலங்கார உரையாசிரியர் எழுதுகிறார். இவ்வாறு செய்யுளில் வரும் எண்கள் இரட்டுற மொழிதலாகவும், ஈறு திரிந்து வரும் என்று இவ்விலக்கணம் கூறும். இவ்வியல்பே எழு கூற்றிருக்கைப் பாடல்களில் காணப்படுகிறது. எழு கூற்றிருக்கை இரத பந்த அமைப்புக்கு உரியது எனறும் தெரிகிறது; மாறனலங்காரப் பதிப்பு இரத பந்தச் சித்திர மெழுதிக் காட்டுகிறது.

முதல் எழுகூற்றிருக்கை இலக்கியம், திருஞானசம்பந்தர் பாடியது. இது முதல் சைவத்திருமுறையில் சீகாழி பற்றிச் சம்பந்தர் பாடிய பாடல் ஆகும். அடுத்துத்தோன்றியது திருமங்கையாழ்வார் பாடிய திருமால்பரமான பாடல். இவற்றின் பின்னர்வந்தது, பதினோராம் திருமுறையில் காணப்படுகின்ற நக்கீரதேவர் பாடிய திருவெழுகூற்றிருக்கை. இதையடுத்த காலத்தில் தோன்றியது. அருகதேவனைப் பரவுகின்ற திருஎழு கூற்றிருக்கை; இது யாப்பருங்கல விருத்தியில் உதாரணப் பாடலாகக் காட்டப பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் சொல்லப்பட வில்லை; உரைகாரரே செய்திருக்கக்கூடும். பின்னர் 15 ஆம் நூற்றுண்டில் அருணகிரிநாதர் முருகன் துதியாக ஓர் எழுகூற்றிருக்கை பாடினார், 17 ஆம் நூற்றுண்டில் மாறனலங்கார உரையாசிரியர் தாமே ஓர் எழுகூற்றிருக்கை பாடி உதாரணங் காட்டியிருக்கிறார். இவ் ஆறுமே இன்று நாம் அறிந்த இவ்வகைப் பிரபந்தங்கள். ஆசிரியருடைய மன விரிவுக்குத் தக்கபடி இப்பாடல்கள் விரிந்தும், சுருங்கியும் செல்லும். விரிந்து சொல்வது எளிது; சுருக்கிச்சொல்வதே அரிது. ஒவ்வொரு பாடலிலும் உள்ள அடிகளின் எண்ணிகை கீழே தருகிறோம்; சம்பந்தர் 47; திருமங்கையாழ்வார் 46; நக்கீரதேவர் 55; அருகப்பெருமானது 36;

அருணகிரிநாதர் 29; மாறனலங்கார உரை 51; "அருணகிரிநாதர் பெயரால் வழங்கும் பாடலே மிகவும் சுருங்கியது' ஏழு எண்களும் ஏறியும் இறங்கியும் இவற்றுள் அமைக்கப்பெறும் முறையைப் பின்வருமாறு ஒரு படமாக அமைத்துக் காட்டலாம்.

						1						
					1	2	1					
				1	2	3	2	1				
			1	2	3	4	3	2	1			
		1	2	3	4	5	4	3	2	1		
	1	2	3	4	5	6	5	4	3	2	1	
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1

இவற்றுள் மாறனலங்கார உரை மட்டுமே முதலில் மையத்தில் ஒன்று வருமாறு செய்யுள் அமைத்துக் காட்டுகின்றது; அவ்வெண்ணை ஏனையவை காட்டவில்லை. எண் வரவேண்டுவது அவசியமில்லை, இரட்டுற மொழிதலும் அவசியமில்லை, எண்ணின் பெயர் தொனித்தால் போதும் என்று பாடல்களின் அமைப்பிலிருந்து நாம் அறிகிறோம்.

அருணகிரிநாதர் பாடியதென வழங்கும் திருவெழுகூற்றிருக்கையில், இறுதியில் இரண்டாம் முறை ஏழு வரை ஏறியும் இறங்கியும் வருகின்ற அமைப்பு இல்லை. மேலும் அருகப்பெருமான் எழுகூற்றிருக்கையில், ஒன்றிலிருந்து மேலே ஏறி இறங்கி ஒன்றுக்கு வரும்போது, அங்கு ஒன்று ஒருமுறை வருகிறதே யன்றி, அடுத்த ஏற்றத்துக்குரிய ஒன்று தனியாக இல்லை. இதைத் தனியாகப் பின்வருமாறு காட்டலாம்.

					1	2	1					
					2	3	2					
			1	2	3	4	3	2	1			
			2	3	4	5	4	3	2			
	1	2	3	4	5	6	5	4	3	2	1	
	2	3	4	5	6	7	6	5	4	3	2	
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1

நக்கீரதேவர் பாடிய திருஎழு கூற்றிருக்கை முழுமையும் சம்பந்தர் பாடிய பாடலைப் பின்பற்றிப் பாடப்பெற்றது. இப்பாடலை யாப்பருங்கல விருத்தி உரைகாரர் மேற்கோளாக எடுத்துத் தருகிறார். ஆனால் திருமுறைப் பாடலுக்கும் விருத்தியுரை மேற்கோட் பாடலுக்கும் எண் அமைப்புக்கள் ஒன்றாய் இருந்தபோதிலும் கூட, பாட பேதங்கள் நிரம்பக் காணப்படுகின்றன! நக்கீரதேவருடைய பாடலைப் பார்த்து யாப்பருங்கல விருத்தியுரைகாரர் அருக பரமாகத் தாமே ஒரு புதிய பாடல் செய்து அதே இடத்தில் மேற்கோள் காட்டியிருக்கவும் காண்கிறோம்.

எழுகூற்றிருக்கையின் நோக்கம், எண்ணுப் பெயர்கள் தொனிக்குமாறு பாடல்பாடுவது; இப்பாடலும் அவ்வாறு பாடப்பெற்றது. பின்னே பாடல் முழுமையும் தருகிறோம்; எழுகூறுகள் அங்கு விளங்கக் காணலாம். தொனியை மட்டும் இங்குக் காட்டுவோம். இருவரை என்றவிடத்து (அடி 26, 35) வலிமை பொருந்திய யானை, திண்மை பொருந்திய மலை என்பது பொருள், ஆயினும் இங்கு இரு என்ற இரண்டாம் எண் தொனிக்கிறது;

பாடலின் இறுதிப் பகுதியில் நக்கீரதேவர் இறைவனுடைய திருநடனத்தைக் குறிப்பிட்டு

நீ ஓதம் பாடிய அண்ணல் ஆதலால் நான் பாடிய அறிவில்லாத வாய்மொழியையும் பொருள் உடையதாகக் கொள்வாயாக என்று வேண்டுகிறார்.

பதினோராந் திருமுறையில் காணப்படும் நக்கீரர் பாடலுக்கும், யாப்பருங்கல விருத்தியில் காணப்படும் பாடலுக்கும் இடையில் பாட பேதங்கள் நிரம்பக் காணப்படுகின்றன; இரண்டையும் ஆராய்ந்து ஒருவகையாக திருத்தமான மூலபாடத்தைக் கீழே தருகிறோம். இவ்வெழுகூற்றிருக்கைக்கு யாம் ஏடு பார்த்து ஆராய முடியவில்லை. ஆதலால் இங்கு தரும் பாடம் இரண்டு பாடல்களையும் வைத்து ஒப்புநோக்கிக் கண்ட முடிபே ஆகும். பதினோராந் திருமுறை பாடல் 55 வரி கொண்டது யாப்பருங்கல விருத்தி பாடல் 58 வரி கொண்டது. அடிவரை

யறையும் இரண்டிலும் வேருக உள்ளது. [1] இரண்டு பாடல்களையும் ஒருசேர வைத்துப் பார்ப்போருக்குப் பின் கூறும் விளக்கங்கள் நன்கு விளங்கும்.

ஓர் உடம்பு ஈருருஆயினை, ஒன்று புரிந்து
ஒன்றின் ஈரிதழ்க் கொன்றை சூடினை;
மூவிலைச்
சூலம் ஏந்தினை; சுடரும் சென்னிமிசை
இருகோட்டு ஒருமதி எழில்பெற மிலைச்சினை;
ஒருகணை இருதோள் சேவியுற வாங்கி
மூஎயில் நாற்றிசை முரண்அரண் தொடுத்தனை;

[முனையரண் என்பதைவிட முரண்அரண் என்பது பொருள் உடையது; முப்புரம்.]

ஆற்ற முந்நெறி பயந்தனை; தேற்றி
இரண்டின் நீக்கி, ஒன்று நினைவோர்க்கு
உறுதி யாயினை;

[பாச ஞானம் பசுஞானம் இரண்டிலிருந்தும் நீங்கி பதி ஞானத்தால் பதியை நினைவோர்க்கு நீ உறுதியாகக் கிடைத்தற்குரியவன்.]

அந்நெறி,
ஒன்று மனம் வைத்து இரண்டும் இல்லோர்க்கு
முந்நெறி உலகம் காட்டினை; அந்நெறி
நான்கென ஊழிதோற்றினை; வான்செலும்
ஐந்தலை அரவு அரைக்கு அசைத்தனை;

[இரண்டும் நினைவிலோர்க்கு என்பதைவிட இரண்டும் இல்லோர்க்கு என்பதே பொருத்தம். சொல்லும் என்பதைவிட வான்செலும் அரவு என்பதே பொருள்

1 இவ்விரு வேறு பாடல்களையும் ஒப்புநோக்கி உண்மைப் பாடத்தினைக் கண்டுணர்தல் அறிஞர்கடனாகும்—பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி, பக்கம் 659.

உடையது. அசைந்தனை என்பது பாடம் அன்று. அரைக்கு அசைத்தனை என்பதே தேவாரங்களில் பயில் வது.]

நான்முகன்

மேன்முகக் கபாலம் ஏந்தினை ; நான்முக
முப்புரி மார்பினை , மூவா மேனியை ;

[மூவா மேனியை என்பது திருமுறைப் பாடத்தில் இல்லை மார்பினை மேனியை என்ற முன்னிலை முடிபுகள் பொருள் தொடர்பு நோக்கி அழகாக உள்ளன.]

இருவரை குடையா ஏந்திய ஆற்றல்
ஒருபெரும் கடவுள் ஒருவன் ஆயினை ;
அங்கு நிற்காணுது இருவர்.

[இவ்வரிகள் விருத்திப் பாடம்.]

மூவுலகுமூன்று நாற்றிசை உழிதர
ஐம்பெருங் குன்றத்து அழலாய்த் தோற்றினை ,
ஆறுநின் சடையது ஐந்துநின் நிலையே !
நான்குநின் வாய்மொழி ; மூன்றுநின் கண்ணே ;
இரண்டுநின் படையே ; ஒன்றுநின் ஏறே ;

[படையே என்பது சூலம் மழு இரண்டையும் குறிக் கும். இரண்டுநின் குழையே என்பது பொருந்தாது. சிவ பெருமான் குழையும் சுருள் தோடும் உடையவர்]

ஒன்றியகாட்சி உமையவள் நடுங்க
இருங்களிற் றுரிவை போர்த்தனை நெருங்கி
முத்தீ நான்மறை ஐம்புலன் அடக்கிய
அறுதொழி லாளர்க் குறுதி பயந்தனை
ஏழில் இன்னரம் பிசைத்தனை
ஆறில் அமுதம் பயந்தனை ஐந்தினில்
வீறுயர் கோவை வியத்தக ஏந்தினை.

[ஐந்தினில் என்பது ஒருகால் ஐந்தினை என்று இருந் திருககலாமோ என்பது ஐயம். இது திருக்கோவை யாரைக் குறிப்பிடுவது ஆகலாம். ஆனல் இதற்கு அடுத்த

நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி திருவாதவூர்ச் சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப் பொருளார் தருதிருக் கோவை என்று குறிப்பிடுவது தவிர வேறு திருக்கோவை பற்றிய பழங்குறிப்புக்கள் எவையும் இல்லை. திருமுறை யில் விறலியர்கொட்டு மழுத்த ஏந்திணை என்றுள்ளது பொருள் விளங்கவில்லை.]

ஆல்நீழல் அருந்தவர்க் கறநெறி
நால்வர் கேட்க நன்கினிது உரைத்தனை ;
நன்றியில்
முந்நீர்ச் சூர்மா முரணறக் கொன்றங்கு
இருவரை எறிந்த ஒருவன் தாதையை ;

[அருந்தவர்க்கு என்பது அன்றிருந்து என்பதைவிட சிறப்பான பாடம்.]

ஒருமிடற்று இருவடி வாயினை ; தருமம்
மூவகை உலகுடன் உணரக் கூறினை :

[கூறினை என்பது கூறுவை என்னும் எதிர் காலத்தை விட அதிகம் பொருந்தும் பாடம்.]

நால்வகை
இலக்கண இலக்கியம் நலத்தக மொழிந்தனை ;
ஐங்கணை யவனொடு காலனை அடர்த்தனை ;
அறுவகைச் சமயமும் நெறியுளி வகுத்தனை ;
ஏழின் ஓசை இராவணன் பாட
தாழாக் கேட்டவன் தலையளி பொருந்தி
ஆறிய சினத்தை யாகி, ஐங்கதித்
தேரொடு மற்றவன் செல்கென விடுத்தனை ;

[தாழா — காலந்தாழ்க்காது. தலையளிபொருத்தினை என்று திருமுறையில் உள்ளது. இந்த வினை முடிக்காமல் பொருந்தி என்று வினைஎச்சமாகக் கொண்டு பின்னல் செல்கென விடுத்தனை என்று இராவணன் வரலாற்றுக்கு ஒரே வினை முடிபு கொடுப்பது தான் பாட்டுக்கு அழகு. திருமுறை பாடம் இங்கு மிகவும் பிழைபட்டுள்ளது. சிந்தையாகி என்றிருப்பது பிழை. சினத்தையாகி என்பதே

சரி. விடுத்தனை என்றிருக்க வேண்டியது விடுத்தோன் என்று படர்க்கையில் இருப்பது பிழை பின்னால் நீ என்று 'விளிப்பதனால் இங்கும் முன்னெல்லாம் கண்டது போல முன்னிலையாக உரைப்பதே முறை.]

நாற்றேன் நளனே நந்திபிங் கிருடியென்று
ஆற்றற் பூதம் மூன்றுடன் பாட
இருகண் மொந்தை ஒருகணங் கொட்ட
மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண
நட்டம் ஆடிய நம்ப அதனால்.

[நளன் நந்தி பிருங்கி ரிஷி என்னும் மூவரும் கணத் தலைவர் பூதம் மூன்றுடன் பாட என்று சொல்வதனால் இங்கு பாடம் நலன் என்று இருக்கமுடியாது. நளன் என்றே இருக்க வேண்டும். நம்ப என்பது நாதன் நீ என்றும் உள்ளது. இப்பகுதியின் பின் வரும் வரிகள் விருத்தியில் அதிகமாக உள்ளன.]

" மண்திணி ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
வழி நின்னடி ஏந்தி நின்றபல
ஊழியும் பொன்னுல கெய்துவர் காண்பர் ;

[இவ்வரிகள் மிகைபோலத் தோன்றுகின்றன.]

அதனால்
அறியேன் சொன்ன அறிவில் வாய்மொழி
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில வணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதம் பரவுவன் சென்னியிற் பணிந்தே.

வேறு ஏடுகள் கிடைத்துப் பாடம் செம்மையாகின்ற வரையில், பதினோராந்திருமுறைப் பாடம் யாப்பருங்கல விருத்திப்பாடம் என்ற இரண்டையும் தழுவித் திருத்த மாக்கப் பெற்ற இப்பாடம் எல்லோராலும் கொள்ளத் தக்கது.

திருநீலக்குடி

(மு. அ.)

இடம்: தஞ்சாவூர் ஜில்லாவில் கும்பகோணத்திலிருந்து காரைக்கால் போகும் பஸ் மார்க்கத்தில் திருநாகேசுவரத்திலிருந்து 2 கல் தென்கிழக்கில் உள்ளது. ஆடுதுறை வடமட்டம் பஸ் மார்க்கத்தில் ஆடுதுறையிலிருந்து 2 கல் தூரம். கோயில் சாலை ஓரம் தனித்துள்ளது. ஊர் பெயர் தென்னலக்குடி என வழங்கும்.

கோயில்: சிறியது. கோபுரம் சிறியது. திருவாவடுதுறை யாதீனத்தின் நிர்வாகம்; சிறப்பாக வைக்கப் பெறவில்லை. முன்பு சூரியனார் கோவில் ஆதீனத்தில் இருந்தது. சுவாமி பெயர் நல்ல நாயகர், மனோக்ஞ நாத சுவாமி; திருநீலகண்டேசுவரர் என்றும் சொல்வர்; இதனாற் போலும் திருநீலக்குடி என்ற ஊர்ப் பெயர். இரு அம்பாள் சந்நிதிகள் உள்ளன; பக்தாபீஷ்ட பிரதாயகி; ஒப்பிலா முலை அம்மை (அனூபமஸ்தனி அல்லது அழகாம்பிகை)

"மங்காத, செல்வ நீலக்குடி சேர் தேவி அழகாள்
மருவும், நல்ல நாம முடைய நாயகா"

பிரகாரத்தில் தல விருட்சம் இருக்க வேண்டிய இடத்தில் மிகப் பெரிய ஒரு பலா மரம் நாகப் பிரதிட்டையோடு இருக்கிறது. பிரகாரத்தின் அக்னி மூலையில் தல விருட்சம் ஆகிய வில்வம் இருக்கிறது.

மூர்த்தி: மூல லிங்கத்திற்கு வழக்கமான அபிஷேகம் அல்லாமல், விசேஷ தினங்களில் தைலக்காப்பு நடைபெறும். ஒவ்வொரு தடவையும் அரைக்கால் ஆடம் (தஞ்சாவூர் ஜில்லா அளவு 8 சேர்) எண்ணெய்த் தேய்ப்பார்கள். எண்ணெய் முழுவதும் சுவாமியினுள்ளே சுவறிவிடும். சுவாமி கோயிலுக்கு இடப் புறத்தில் அம்பாள் சந்நிதிகள் இரண்டும் சேர்ந்தாற போல் உள்ளன. முதல் அம்பிகை தக்ஷன் மகள், சிறிய உருவம்; மற்ற அம்பிகை ஒப்பிலா முலையம்மை, பெரிய திருவுருவம்; சிறப்புக்கள் இந்தச் சந்நிதியிலேயே நடைபெறுகின்றன. கோபுர

வாயிலின் உட்பக்கத்தில் தென்புறம் பிரும்மா வழிபட்ட லிங்கம் தனிக் கோயிலில் உள்ளது. மார்க்கண்டேயரும் இங்கு வழிபட்டுப் பேறு பெற்ருர். சுவாமி சந்நிதி வாயிலின் இருபுறமும் விநயகர், சுப்பிரமணியர், துவார பாலகர் சுதை வேலே. அப்படியே ஒப்பிலா முலேயம்மை வாயிலிலும் துவாரபாலகியர் சுதை. அம்பிகை மண்டபம் இரண்டிலும் மண்டபத்தின் மீது மேலே சந்நிதிக்கு நால்வராக சுதையில் அஷ்ட லக்ஷ்மிகள். சுவாமி சந்நிதியின் எதிரில் வாயிலின் உட்புறம் சந்திர சூரியர். நிருதி விநாயகர் முன்புறத்தில் மூவரும் மார்க்கண்டேயரும் உள்ளனர்; மாணிக்கவாசகர் சிலே இல்லே. ஆனுல் அவர் மட்டும் நடராஜா சந்நிதியில் உற்சவராக உள்ளார். நடராஜா திருவுருவங்கள் இரண்டு உள்ளன. உரியது சிறிய உருவம். மற்றது அம்பிகையோடு பூமியில் இருந்து கிடைத்த பெரிய அழகான திருவுருவம். திருச்சுற்றில் மயிலோடு கூடிய பாலசுப்ரமணியர்; தேவியர் இல்லே. அடுத்து சண்முகர் தேவியரோடு அமர்ந்திருக்கிருர்.

வரலாறு: தக்ஷனுடைய மகள் இந்தத் தலத்துக்கு வந்து ஐந்து வில்வங்களின் அடியில் சுவாமி எழுந்தருளியிருக்கக்கண்டு பூஜித்தார். அவரே சுவாமிக்குத் தைலம் தேய்த்து முழுககாட்டினுர். சாப விமோசனத்தின் பொருட்டு இங்கு வந்து பூஜிக்கும்படி அம்பிகைக்குப் பெருமான் உத்தரவிட்டாராம். பஞ்ச வில்வங்களின் அடியில் பெருமான் இருந்த படியால் இது பஞ்சவில்வாரண்யம் என்ற சிறப்புப் பெயர் பெறும்

விழா: முன்னமே இங்கு சித்திரா பெளர்ணமியில் விழா நடந்தது. திருநீலக்குடியைச் சுற்றிச் சப்த ஸ்தானங்கள் உள்ளன. இவை விட்டலூர், இலந்துறை, ஏனுதிமங்கலம், திருநாகேசுவரம், திருபுவனம், திருவிடைமருதூர், மருத்துவக்குடி என்பன. சுவாமி பல்லக்கில் இந்த ஸ்தலங்களுக்குச் சென்று முன்பு விழாக்கொண்டார்; இப்பொழுது விழா நடைபெறுவதில்லே.

பாடல்: இத்தலத்திற்கு அப்பர் குறுந்தொகைப் பதிகம் ஒன்று உண்டு; "வைத்த மாடும் மனேவியும்"

என்று தொடங்கும் பதிகம். இத்தலத்துப் பதிகத்தில் தான் அப்பர் தம்மை அமணர் கல்லோடு பூட்டிக் கடலில் விட தாம் அரன் நாமம் நவிற்றி உய்ந்தமையைக் குறிப் பிடுகின்ருர் :

கல்லி ஞேடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினுல்
நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேன்அன்றே.

சிறப்பு : இரண்டு அம்பிகை சந்நிதி, பஞ்ச வில்வா ரணியத் தலம் என்பது ; நீலக்குடி தனக்கெனச் சிறப்பான சப்த ஸ்தானம் உடைமை.

சாத்திரப் பகுதி.

முப்பொருளுண்மை

(M. P. தியாகராஜன் B. A.)

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத்தலை.

என்ற குறளில் பேருண்மை ஒன்று விளக்கப்படு கிறது. ஐம்பொறிகளாகிய மெய் வாய் கண் மூக்கு செவி விஷயாதிகளைக் கொள்ளும் தன்மையுடையனவாக இல்லா விடில் அவற்ருல் அடையும் பயன் ஒன்றுமில்லை யென்ற படி. ஒருவன் கண் பார்வையிழந்து கிடப்பின் அவனைக் கண்ணில்லாதவன் என்று கூறுகிருேம். ஒருவனுக்கு வாயால் பேச இயலவில்லையானுல் அவனை ஊமை அல்லது வாயில்லாதவன் என்கிருேம்! பேசாத விலங்குனங்களை வாயில்லாப் பிராணிகள் என்று கூறுவோம். வாயால் அவைகள் உணவு உட்கொள்கின்றனவேயென்ருல் வாயின் தருமம் பேசுவது யன்றி உணவு அருந்துவதன்று. பேசு வது வாய்ப் பொறிக்கமைந்துள்ள சிறப்பு தர்மமாகும். அதேபோல் சூரியன் ஒளியின்றியிருப்பின் சூரியனில்லை

யென்று கூறிவிடுவோம், இல்லையென்று கூறுவதன் கருத்து சூரியன் தன் தருமத்தைச் செய்யவில்லை யென்பதாம். அதுபோல் பஞ்சபூதங்கள் தங்கள் தருமங்களை, கடமைகளை, இயல்புகளைச் செய்ய வழுவினால் அவைகளில்லை யென்று கூறுவது முறையாகாது. உயிரின் தன்மை அறிவோடு விளங்குவதாகும். உயிரினின்று அறிவுவெளிப் படவில்லையானால் உயிர் விளங்கிக் காணாது; அது இல்லை யென்று கூறப்படும். உடல் உயிரால் இயங்கிக்கொண்டிருப்பின் உடல் வாழ்கிறது என்று கூறுவர். உடல் செயலற்றுப் போனால் உயிரில்லையென்று கூறுவோம், உயிர் அவ்வுடலிலில்லையேயன்றி உயிரேயில்லையென்று கூறுவதில்லை அவ்வுடலிலில்லை யென்று கூறுவதுமில்லை.

ஐம்பூதங்களையும், சூரியன் சந்திரன் உயிர்கள் கிரகங்கள் முதலியயாவற்றையும் தம்தம் தருமங்களைச்செய்து அவ்வவற்றின் இயல்புகளில் விளங்கச் செய்பவர் சிவ பெருமான். எனவே அவன் அஷ்டமூர்த்தமாக விளங்குகிறான் என்று கூறப்படும்.

மண்ணொடுநீர் அனல் காலொடு மதிஇரவி
எண்ணில் வருமிய மானன் இகபரமும்
பெண்ணினொடுஆண் பெருமையோடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர் கோன்வழிபட வெண்காடிடமாக விரும்பினனே.

என்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாடியருளியுள்ளார். அவன் தருமவிடையை ஊர்தியாகக் கொண்டுளான் என்பது பொருள்கள் அவ்வவ்வற்றின் தருமங்களைச் செய்ய உதவுகின்றவன் என்பதாகும். அவன் எல்லாமாய் அவ்வவற்றை இயக்கிக்கொண்டு உடனும் வேறும் இருக்கும் தன்மையுடையவன். எல்லாமாய் விளங்குந் தன்மையால் மட்டும் அவனையன்றி அப்பொருள்களில்லை யென்று கூறுவது பிழையன்றோ? கண் பார்வையிழந்து விளங்குவதால் கண்ணேயில்லை யென்று கூறிவிட முடியுமா? உயிர் அறிவோடு விளங்கவில்லை யென்றால் உயிரேயில்லையென்று கூறிவிடலாமா? ஜக ஜீவ பரம், பதி பசு

பாசம்; என்று கூறும் முப்பொருள்கள் அநாதி நித்யமாயுள் ளன. அவ்வவற்றின் தன்மையை விளங்கச் செய்பவன் இறைவனும் பதியென்று சைவ சித்தாந்தம் கூறும். சிவ பெருமான் அவைகளாகவும் அவற்றை விளக்குபவனுகவும் அவற்றிற்கு அன்னியமாயும் விளங்குகிருன்; எனவே எண்குணத்தானுகிய பதியை வணங்கி அவனருளைப்பெருத தலை, ஐப்பொறிகளை உடைத்தாயினும் அப்பொறிகள் பஞ்சதன் மாத்திரைகளைக் கொள்ளும் தன்மையிழந்தன வாக பயனற்றனவாக விளங்குமென்று திருவள்ளுவர் மேற்படி குறளில் எடுத்துக் காட்டுகிருர். எவ்வளவு சுருக்கமாகச் சைவ சித்தாந்தத்தின் முப்பொருளுண்மையை இக்குறள் விளக்கிக் காட்டுகிறது!

அப்பர் பெருமான் இவ்வுண்மையை யெடுத்துக்காட்ட எடுத்துக்கொள்ளும் உவமையைப் பின்வரும் பாடலில் காணலாம்.

உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்துநோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே.

இப்பாடலில் நாவுக்கரசர் எடுத்துக்கொண்ட உவமை விளக்கு. விளக்கு எரிவதற்கு எண்ணெய், திரி, காற்று மூன்றும் வேண்டும், இவற்றில் எது எரிகிறது என்று கூறமுடியாது. அதேபோல் உயிராகிய திரி, பாசமாகிய உணர் நெய்யில், அறிவெனும் சுடர் பற்றி எரிவதுதான் இவ்வுலக இயக்கம். இதல் வாலறிவனுகிய பதி முக்கியமா? உயிர் முகக்கியமா? பாசம் முகக்கியமா? என்று கூறமுடியாது. மூன்றும் அநாதி நித்தியமாயுள்ளன. ஒன்றையொன்று உற்பத்திசெய்யவில்லை. தனித்தனியாக இருந்தவை ஒன்றுகூடில மூன்றும் விளங்குகின்றன. உயிரைத் திரிக்குவமையாக்கி அதை அடிக்கடி சிட்டங் கட்டாமல் பார்க்கவேண்டுமென்று மேற்படி பாடலில் அப்பர் பெருமான் நினைப்பூட்டுகிருர். திரிசிட்டங் கட்டு வது போல உயிரினிடத்து ஆணவமலமாகிய சிட்டம் கட்டி ஞல் உயிர் தன் அறிவில் நன்கு விளங்காது. தான் அறி

வோடு விளங்குவதற்கு இறைவன் அருள் உதவிபுரிகிற தென்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். அப்போது தான் ஆணவமலம் நீங்கப்பெறும் இதுபற்றியே திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் "எனதுரை தன துரையாக" என்று திரு இலம்பையங்கோட்டூர்ப்பதிகத் தில் பாடியருளியுள்ளார்.

விளக்கை யேற்ருமல் எந்த பூஜையும் செய்வதில்லை. ஆலயங்களிலும் தீப ஆராதனையை நான்கு காலங்களிலும் செய்து காட்டுகிருர்கள. சில இடங்களில் ஆறு காலங் களிலும் தீப ஆராதனை செய்கிருர்கள். அந்தவேளைகளில் நாம் முப்பொருள் உண்மையை நினைவிற்கொண்டு முதல் வனின் அருளால் யாவும் நிகழ்கின்றதெனவும் தன் முனைப் பின்றி அவனருள் கொண்டு வாழ வேண்டுமென்றும் அவன் சுயநலமின்றி உயிர்கள் மாட்டு விளங்கச்செய்யும் தொழிலைப் போல நாமும் சுற்றம் விளங்க மற்றையோரும் நலம்பெறத் தொழில்புரிய வேண்டுமென்றும் முப்போதும் நினைந்து சிவபெருமானை வழிபடல் வேண்டும். முடிவில் கற்பூர தீபத்தை யேற்றிக் காட்டுவது எதை உணர்த்த வேண்டுமெனின் எண்ணெயின் ஆதாரங்கொண்டு விளக் கெரிவதுபோல உயிர் ஐம்புலனுகாச்சியாகிய எண்ணெயை ஆதாரமாகக் கொண்டு பாச அறிவிலேயே விளங்காமல் நிராதார நிலையில் சுயம்பிரகாசமாய் அவன் ஒளியில் திகழ வேண்டும் என்பதாம்.

எந்தக்காரியம் நிகழ்வதற்கும் முப்பொருள் தேவைப் படும். ஒருபள்ளிக்கூடம் என்ருல் ஆசிரியர், மாணவர்கள் பாடப்புத்தகங்கள் வேண்டும். ஒரு அலுவலகம் என்ருல் முதலாளி, தொழிலாளி, தொழில் மூன்றும் தேவை. தொழிலாளி முதலாளி கொடுக்கும் தொழிலைச் செய்ய வேண்டும். ஒரு செடி வளரவேண்டுமாயின் விதை, மண், நீர் ஆகிய மூன்று பொருள்கள் வேண்டும். விதையை நாம் படைப்பதில்லை. விதையை மண்ணில் புதைத்து நீரைப் பாய்ச்சிவந்தால் சிலநாட்களில் அவ்விதையினின்று முளை கிளம்பி இலைகள் விட்டு கிளைகள் உண்டாய் செடி வளரக் காண்கிறேம். விதையில் பாலில்படு நெய்போல் மறைந்திருந்த செடி மண்ணையும் நீரையும் அதோடுசேர்த்த

உடன் வெளிப்பட்டு வளர்கிறது. அதேபோல் உயிரை இந்த உடலில் புதைத்து, ஐம்புலன் வழி உலக விஷயாதி களைப் பாய்ச்சி உயிரினின்று அறிவு வெளிப்பட்டு வளர்கிறது. வளர்ந்து கட்டுப்பட்ட உலகையும் உலகப்பொருள்களையும் அறிந்து வியாபக அறிவாய் விளங்கும் இறைவனை அறிவதே அவ்வறிவு வளர்ச்சியின் முடிவாகும். எப்படி மரம் முதிர்ந்து பூத்துக் காய்த்துப் பழங்களைத் தருகிறதோ அதுபோல பாச அறிவு பசு அறிவாக வளர்ந்து பதி அறிவாய் முதிர்ந்து சிவானந்த போதமாகிய பழத்தைத் தரல் வேண்டும். அக்கனியை உண்ட அப்பர் "கனி தந்தால் கனி உண்ணவல்லீரே" என்று ஏனைய மக்களுக்கும் கொடுக்க முனைகிறார். அக்கனியை உண்பதற்குச் சாதனம் திருத்தொண்டின் நெறியேயாகும்.

மதிப்புரை

ஸ்ரீ ஆனந்த சாகரஸ்தவம்: கவியரசு. கு. நடேச கவுண்டர் 3/84, காந்திபுரம், நான்காவது வீதி, கோயமுத்தூர்–12.

17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வேலூரில் வாழ்ந்த அப்பைய தீக்ஷிதர் பேரரான நீலகண்ட தீக்ஷிதர் செய்த இந்த வடமொழி நூலை கோவை கு. நடேச கவுண்டர் விருத்தப் பாக்களில் மொழி பெயர்த்து சாதாரண ஆண்டுப் பிறப்பு தினத்தன்று கோவை சென்னியப்ப கவுண்டர் அவர்கள் உதவி பெற்று வெளியிட்டுள்ளார். 108 பாடல்கள் மொழிபெயர்ப்பு. ஆசிரியர் பாயிரமாக 6 பாடல் சேர்த்து இன்ப மாகடல் என்று தமிழில் பெயர் சூட்டியிருக்கிறார். முன்னுரையில் சைவத் திருமுறைகளின் சாரம் இவ்வடமொழி நூலில் நிரம்பக் காணப்படுகின்றது என்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார். அதற்கு முன்னமே இவர் 3 தமிழ் ஆண்டுப் பிறப்புத் தினங்களில் 3 வடமொழி தோத்திர நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இந்நூலானது மீனாட்சி அம்மை துதியாக தீக்ஷிதர் பாடியது. பாட நேர்ந்த சந்தர்ப்பம் முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளது. வட நூல்களின் கருத்துச் சிறப்புத் தமிழிலும் பரவ வேண்டும் என்று உணர்த்தி வருகின்ற இவ்வாசிரியரின் சீரிய தொண்டு பெரிதும் பாராட்டு தற்குரியது. நூல் வேண்டுவோர் ஆசிரியருக்கு 75 காசு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். (மு. அ.)

ஊராகி நின்ற உலகே போற்றி

(அம்பை சங்கரனார்)

ஊராகி நின்ற உலகே போற்றி
    ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
    பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
    நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி.

(அப்பர்)

இத் திருத்தாண்டகத்தில் "நீராவியான நிழலே போற்றி" என்பதற்குரிய தெளிவுரையைச் சித்தாந்தம் மலர் 43 இதழ் 5-ல் விளக்கமாகக் கண்டிருக்கலாம். "ஊராகி நின்ற உலகே போற்றி" என்னும் தொடருக்குரிய விளக்கத்தை இக்கட்டுரையில் காண்போமாக.

இத்தொடருக்கு இருவிதங்களில் பொருள் காணலாம். 1. ஊ:-ஊர்தல் என்று பொருள்படும் முதனிலைத் தொழிற் பெயராகும். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் ஊர்ந்து நிற்கின்ற ஒப்பற்ற பரம் பொருள். இறைவனின் ஒப்பற்ற எங்கும் பரந்துள்ள பெருமையைக் குறிக்க அவனையே "உலகே" என்று விளித்துள்ளார். உலகத்துள்ள உயிர் களுக்கெல்லாம் முழுமுதற் காரணமாய அவனை உலகு என்னும் மங்கலச் சொல்லால் விளித்த சிறப்பு எண்ணி எண்ணி இன்புறுதற்குரியது. ஆகவே எங்கும் நிறைந்துள்ள எலலா உயிர்கள் மாட்டும் ஊடுருவி ஊர்ந்து நிற்கின்ற தன்மை வாய்ந்த ஒப்பற்ற பெருமை வாய்ந்த பேருல

கம்போன்ற பெருமானே வணக்கம் எனப் பொருள் காண லாம். "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்னும திருவை யாற்றுத் தாண்டகச் செய்யுளையும் கூர்ந்து நோக்குக.

2. மேலும் ஊர் என்பது ஒரு குறிப்பிட்ட சிறு இட எல்லைக்குரிய பெயராகும். உலகு என்பது இடத்தின் பேரெல்லைக்குரிய பெயராகும். பெருமான் சிறுமை பெருமை என்னும் வேறுபாடு கொள்ளாதவன். சிற்றூர் களிலும் பேருலகிலும் உள்ள எறும்பு முதல் பெருவிலங்கு ஈறாக உள்ள எல்லா உயிர்களையும் ஆட்கொள்ளும் தன்மை வாய்ந்தவன். அதனாலேயே ஒப்பற்ற பரம்பொருளை இட வாகுபெயர்களான் ஊர் என்றும் உலகு என்றும் அப்பர் பெருமான் குறிப்பிடுகின்றார் என்றும் கூறலாம். அதனால் சிற்றுயிர்களிடத்தும் அதன் சிறுமை கருதி விலக்காது ஊடுருவி நின்று ஆட்கொள்ளும் தன்மைவாய்ந்த பெருமை மிக்கவனே வணக்கம் என்று பொருள் காணலாம்.

ஆகவே இத்தொடரிலிருந்து பெருமானின் ஒப்பற்ற பெருமையையும் அவன் எங்கும் நிறைந்திருக்கின்ற தன்மை யையும் அவ்வாறு நிறைந்திருத்தலோடு அவ்வவ்வுயிர்கள் மாட்டு ஊடுருவி நின்று ஆட்டுவிக்கின்ற ஒப்பற்ற தன்மை யையும் அவன் உலகத்துயிர்கள் யாவற்றையும் ஒப்ப நோக் கும் உயர்ந்த சால்பினன் என்பதனையும் அத்தகையவனை வணங்குவதே உயிர்களின் கடமை என்பதனையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வளவு பொருட் செறி வுள்ள தொடர்களைத் தந்துள்ளதால் தான் "சொற்குறுதிக் கப்பர்" என்ற பெருமையை ஆன்றோர்கள் திருநாவுக்கர சருக்குச் சூட்டுவாராயினர். நாமும் அப்பெரியார் கூறிய வழி நின்று அப்பரம்பொருளை வணங்கி நம் வாழ்க்கையை மேம் பாடடையச் செய்வோமாக.

சமயப் பெரியார் பகுதி.

பர்த்ரண்டு ரஸ்ஸல்

(Bertrand Russell)

கொ. நீ. சிங்காரவேலு

மேற்குறித்த பெயர் கொண்ட உலகப் புகழ் பெற்ற ஆங்கிலத் தத்துவ அறிஞர் 3—2—70இல் இவ்வுலக வாழ்க்கையை நீத்து அமரரானார். இவர் 18-5-1872 இல் இங்கிலாந்தில் பிறந்து 97 ஆண்டுகள் வாழ்ந்தார். அரை நூற்றாண்டுக்குமேல் இவர் பல நூல்கள் இயற்றி சிறந்த வல்லுநர்களையும் பொதுமக்களையும் மாணவர்களையும் சிந்திக்கச் செய்தார். இவர் நூல்களில் கூரிய தெளிந்த அறிவும் அதற்கேற்பத் தெளிவான நடையும், அச்சமின்மையும் நேர்மையும் செறிந்திருத்தல் காணலாம். இவர் முதல் உலகப்போர் நடக்கும்போது போர் கூடாது என்று கிளர்ச்சி செய்து சிறை சென்றார். ஏழை மக்களுக்கும் சிறு நாடுகளுக்கும் செல்வர்களாலும் வலிமை வாய்ந்த நாடுகளாலும் அநீதி நேரும்போதெல்லாம் இவர் அவர்களுக்காக வாதாடினார். சிறு வயதிலிருந்தே தாம் மதிப்பவை இரண்டு ; ஒன்று மற்றவர்களிடத்தில் அன்பு காட்டுதல், இரண்டு, தெளிவான அறிவு என்று அவரே தம் வரலாற்றில் கூறியுள்ளார்.

இவர் தம் பதினோராம் ஆண்டிலேயே கணிதத்தைக் கூர்ந்து கற்கத் தொடங்கினார். கணிதம்தான் தன் முதல் காதலி என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கணிதம் எல்லா விஞ்ஞானத்திற்கும் அடிப்படை என்பர். கணிதத்தில் எந்த உண்மையும் காரண காரிய முறையில் மெய்ப்பிக்கப் படாமல் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் கணிதத்திலும் அடிப்படை உண்மைகள் அல்லது மெய்ப்பித்தல் தேவைப்படாது தாமே விளங்கும் உண்மைகள் (Axioms) என்று சில உண்மைகள் கொள்ளப்படுகின்றன. ரஸ்ஸல் இவ்வுண்மைகளையும் காரணகாரிய முறையில் மெய்ப்பிக்க வேண்டும் என்று முயன்றார். பல ஆண்டுகள் உழைத்த தன் பலனாக "கணிதத்தின் அடிப்படை உண்மைகள்" (Principia Mathematica) என்ற மாபெரும் நூலை இயற்றி

ஞர். தாம் சிறையில் இருந்தபோது "கணித தத்துவத்திற்கு முன்னுரை" என்ற ஓர் அரிய நூலையும் இயற்றினூர். இந்நூல்களால் மனிதன் பெற்ற கணித அறிவு விரிவு பெற்றது.

பின்னர் இவர் தத்துவம், சமூக இயல், அரசியல், முதலியவற்றைப் பற்றிப் பல நூல்கள் எழுதினூர்.

இவர் தாம் வாழ்க்கையில் கொண்ட குறிக்கோள்களைப்பற்றித் தம் வரலாற்றின் முன்னுரையில் கூறியுள்ளார். அவர் கூறியதின் சுருக்கமாவது:—

"என் வாழ்க்கையை மூன்று ஆர்வங்கள் கவர்ந்து செலுத்தின-அவை எளிய சாதாரண குணங்களாக இருந்த போதிலும் என்னிடம் மிகவும் வலிமை வாய்ந்தவைகளாக இருந்தன. அவை:— 1. காதல் வேட்கை, 2. அறிவுத் தாகம், 3. கழிபேர் இரக்கம்.

இம்மூன்று ஆர்வங்கள் என்னைப் புயற்காற்றைப் போல் இங்கும் அங்கும் அலைக்கழித்துச் சிற்சில காலங்களில் துன்பக் கடலில் ஆழ்த்தி மனம் முறிவு கொள்ளும் நிலைக்குக் கொண்டு நிறுத்தியுள்ளன. காதல் மனிதனின் பயங்கரத் தனிமையைப் போக்குகிறது. உயிர் அளவிட முடியாத, ஆழமான உயிரற்ற அகழியின் விளிம்பில் தனிமையாக நடுங்கிக் கொண்டிருக்கிறது. இத்தனிமையுணர்வு காதலால்தான் போக்கப்படுகிறது.

காதலுக்கு எவ்வளவு ஆர்வம் காட்டினேனே அதே அளவு அறிவு வளர்ச்சிக்கும் ஆர்வம் காட்டினேன். மக்களுடைய மனத்தை ஆய்ந்து அறிய ஆசை கொண்டேன்; விண்மீன்களின் செய்திகளை அறிய அவாவினேன், கணித சாத்திரத்தின் ஆழங்காண முயன்றேன். இவ்வாறு அறிவைப் பெருக்குவதில் ஓரளவு வெற்றியடைந்தேன்.

காதலும், அறிவும் இயன்ற அளவு என்னை வானுலக இன்பத்திற்கே அழைத்துச் சென்றன. ஆனூல் மூன்ருவது

குணமாகக் கூறப்பட்ட இரக்கம் என்னை இவ்வுலகத்திற்குத் திரும்பத் தள்ளியது. உலகத்திலுள்ள துன்பத்தின் அழுகுரல் என் இதயத்தில் எதிரொலித்தது. வறுமையில் வாடும் குழந்தைகள், கொடுமையாளர்களால் துன்பப்படுகிறவர்கள், தங்கள் பிள்ளைகளாலேயே புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற முதியவர்கள், ஆகியோர்களின் துன்பத்தைத் துடைக்க ஆசைப்படுகிறேன்; ஆனால் அது இயல்வதில்லை; ஆகையால் நானும் துன்பப்படுகிறேன்.''

மேற்குறித்த குறிப்பிலிருந்து ரஸ்ஸல் அவர்கள் பகுத்தறிவுக்கு முதன்மை கொடுத்த போதிலும் நல்ல உணர்ச்சிகளின் தேவையை உணர்ந்துள்ளார் என்பது தெளிவாகும். உலகம் நல்ல முறையில் இயங்க வேண்டுமானால், தெளிவான அறிவும், அன்பு உள்ளமும், ஒரு படித்தாகத் தேவை என்பதை ரஸ்ஸல் அடிக்கடி கூறியுள்ளார். அறிவு செயல்படுவதற்கு உணர்ச்சி தேவை.

பின்வரும் கருத்துக்களை ரஸ்ஸல் அவர்கள் ''சமூகப் புனர் அமைப்பு பற்றிய அடிப்படைக் கொள்கைகள்'' (Principles of Social Roconstruction) என்ற நூலில் கூறியுள்ளார்.

மனிதனுடைய எல்லாத் தொழில்களும் உணர்ச்சிகளும் மூன்று அடிப்படைகளிலிருந்து தோன்றுகின்றன. அவையாவன :—

1) இயற்கையறிவு அல்லது இயல்பூக்கம் (Instinct)

2) உள்ளம் (Mind)

3) ஆன்மீகம் (Spirit)

முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட இயற்கை அறிவின் அடிப்படையில் வாழும் வாழ்க்கையில் நமக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேற்றுமை குறைவு தற்காப்பு, இனப்பெருக்கம் ஆகிய இரண்டு உணர்வுகளும் அவை அடிப்படையாகப் பிறக்கும் செயல்களும் உணர்ச்சிகளும் இயற்கை

அறிவு வாழ்க்கையின்பாற்பட்டன. ஆணவம், பொருள் பற்று, குடும்பப்பற்று, தேகப்பற்றில் பெரும்பகுதி ஆகியவை இவ்வாழ்க்கையில் சேர்க்கப்பட வேண்டியவை.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட உள்ளத்தின் அடிப்படையில் வாழும் வாழ்க்கை அறிவு வாழ்க்கை-அது என்ன இது என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் சாதாரண ஆர்வம் (Curiosity) முதற்கொண்டு பெரும் கண்டுபிடிப்புகள் வரை உள்ள அறிவுத் திறம் இவ் வாழ்க்கையின் பாற்படும். இக்காலத்தில் மனிதன் அடைந்த விஞ்ஞான சாதனைக்கெல்லாம் அடிப்படை இவ்வுள்ளத் தின் அடிப்படையில் வாழும் வாழ்க்கையே. இவ்வாழ்க்கை தன்முனைப்பற்றது. யான், எனது என்னும் உணர்ச்சி களுக்குப் புறம்பானது.

மூன்றாவதாகக் குறிப்பிடபபட்ட ஆன்மீக வாழ்க்கை யிலிருந்து சமய வாழ்க்கை அரும்புகிறது. எப்படி அறிவு வாழ்க்கை தற்சார்பு அற்ற (Impersonal) அறிவை அடிப் படையாகக் கொண்டதோ அவ்வாறே ஆன்மீக வாழ்க்கை தற்சார்பு அற்ற (Impersonal) உணர்ச்சியை அடிப்படை யாகக் கொண்டது. கலை ஆன்மீக வாழ்க்கையின் பாற் பட்டது. கலை, இயல்புணர்ச்சியில் (Instinct) தோன்றி ஆன்மீக வாழ்க்கையில் மலர்கிறது. சமயம் ஆன்மீக வாழ்க்கையில் தோன்றி இயல்புணர்ச்சியிலும் ஆதிக்கம் செலுத்தி அதை மாற்ற முயல்கிறது.

வழிபாட்டுணர்ச்சி, மனித குலத்திற்குக் கடமைப் பட்டிருக்கிறோம் என்ற மனப்பாங்கு ஏதோ ஒரு சக்தியால் உந்தப்பட்டுச் செயல்புரிகிறோம் என்ற உணர்வு ஆகியவை ஆன்மீக வாழ்க்கையின் இலக்கணங்கள்-இவ்வுணர்ச்சிகள் தாம் சமய வாழ்க்கையின் அடிப்படை. இவை இல்லை யாயின் வாழ்க்கையில் அடையக் கூடிய உயர்ந்த நிலை இல்லையாகும்.

இயல்புணர்ச்சி (Instinct), உள்ளம் (Mind), ஆன் மீகம் (Spirit) இவை மூன்றும் முழுவாழ்க்கைக்குத தேவை யானவை.

மேற்சொன்ன கருத்துக்களிலிருந்து ரஸ்ஸல் அவர்கள் சமய வாழ்க்கைக்கு விரோதி அல்லர் என்பதும், அவர் கருத்துக்கள் அறிவைத் தெளிவு படுத்தி மூட நம்பிக்கைகளை அகற்றி உண்மையான தூய சமய வாழ்க்கைக்கும் ஆக்கம் தருவதாக உள்ளன என்பதும் ஒருவாறு புலப்படும்.

சமயப் பகுதி

பூம்பாவையார்

(வித்துவான். சி. குமரேச பிள்ளை)

சென்ற இதழின் தொடர்ச்சி

வருடங்கள் ஐந்து கழிந்தன. ஞானசம்பந்தப் பெருமான் பல இடங்களைத் தரிசித்துக்கொண்டு மயிலையை அடுத்த திருவொற்றியூரை அடைந்த செய்தியைச் சிவநேசர் அறிந்தார், பெருமகிழ்வுகொண்டார். மயிலை முதல் திருவொற்றியூர் வரையுள்ள பத்துநாழிகை வழியளவும் காவணம் அமைத்து, விதானம், வாழை, தோரணம் ஆகிய வற்றால் அலங்கரித்தார். 'அவர் வருவதற்குமுன், நானே சென்று அவர் பொன்னடியைத் தலைமிசைச் சூட்டுவேன்'' எனக்கூறி, ஒற்றியூர் நோக்கிச் செல்லலானார். சீகாழிப் பெருமானும் ஒற்றியூர் அகன்று மயிலாபுரி நோக்கித் தொண்டர் குழாத்தோடு வந்துகொண்டிருந்தார். கண்ட சிவநேசர், ''ஆறு சூடினார் திருமகனார் அணைந்தார்'' எனப் போற்றி அளவுகடந்த மகிழ்ச்சியால் விழுந்து வணங்கினார். ஞானசம்பந்தப்பெருமானும் சிவிகையினின்றும் இறங்கிச் சிவநேசரை வணங்கினார். உடன்வந்த தொண்டர்கள் சிவநேசரது இயல்பையும் செயலையும் கூறக் கேட்டுக் கொண்டே மயிலாப்பூர் அடைந்தனர்.

சம்பந்தப்பெருமானுடைய சிந்தனை முழுவதுமே சிவநேசர் செய்கையில் இருந்தது. ''பூம்பாவை ஞானசம்பந்தப் பெருமானுக்கென்று கூறியதனால் நாம் துன்புறுவதற்கொன்றுமில்லை'' என்று கூறி, பூம்பாவை உயிருடன்

வாழ்ந்தால் எத்தகைய சிறப்புக்களைச் செய்வாரோ அவற்றையெல்லாம் செய்து, தன்பால் பற்றுதலும், நம்பிக்கையும், பக்தியும் கொண்டு இடர்நீங்கி இன்புற்று வாழ்ந்த சிவநேசரது அன்பின் திறமும், சிவனருட் செயலும் வெளிப்பட வேண்டுமென்று கருதினார். அவ்வாறு செய்வது சமண சாக்கியர்களது புறவாழ்வையேகுறிக்கொண்ட நெறியை அழிக்கும் எனவும் கருதினார். அவற்றின் பொருட்டுத் தன்னை ஆட்கொண்ட இறைவனது பெருங் கருணை நோக்கம் வந்து கைகூட மகிழ்ந்தவராகி மயிலையில் கோயில் கொண்டருளிய கபாலீச்சரர் ஆலயம் சென்று சேர்ந்தார், கோபுரத்தைத் தொழுது உட்புகுந்தார்; கோவிலை வலம்வந்தார்; செங்கையைச் சென்னிமீது குவித்துத் திருமுன் சென்றார்; அன்பு பொருந்திய பண்பினால் துதித்தார்; காதலினால் நிலமுற விழுந்து பணிந்தார்; தெய்வத் திருப்பாட்டிசைத்துப் போற்றினார்; சிவநேசரது சிந்தையில் குடிகொண்ட எண்ணம் ஈடேற வேண்டுமென்ற விருப்புடனே, இறைவன் அருள்திறம் வேண்டி வணங்கினார். அது காலையில் இறைவன் இன்னருள் பெற்று மயிர்ப்புளகம் கொண்டார், பின் கோயில் புறத்தேவந்து, தாம்பெற்ற 'அருள்' வணிகர் மேற்செல்லத் திருவுளம் கொண்டார். வணிகரும் சிவனருள் பெறுதற் தகுதியுடை குத்தயவர்; சிவபெருமானுக்கு ஆளாகின்ற திறம் ஒன்றினையே நினைந்து ஒழுகும் உணர்வுடையவர். ஆகவே, அவரை நோக்கி,

"ஒருமை உய்த்த நல்லுணர்வினீர் உலகவர் அறிய
அருமையால் பெறுமகள் என்புநிறைந்த அக்குடத்தைப்
பெருமயானத்து நடம்புரிவார் பெருங் கோவில்
திருமதிற் புறவாய்தலிற் கொணர்க" என்றுசெப்ப

வணிகரும் மகிழ்ந்து விரைந்து சென்றார். கன்னிமாடமடைந்து அக்குடத்தை யெடுத்துச் சிவிகையுள் ஏற்றி மணமகளைக் கொண்டு வருவது போலக் கொண்டு வந்து, கோபுர வாயிலையடைந்ததும், மணிச்சிவிகையினின்றும் குடத்தை எடுத்து. சிவபெருமான் சந்நிதியின் எதிரிலே வைத்து வணங்கி நின்றார்.

ஞானசம்பந்தப்பெருமான் உலகமக்களுக்கு உறுதியைத் தருவது எது என்பதைச் சாதிப்பதற்காக எழுந்தார். தொண்டர்களும் சூழ்ந்து எழுந்தனர். மயிலை நகரத்து மக்களும், சுற்றுப்புறத்து மக்களும், சிவபெருமானது அருள் திறத்தை உணராத பிறசமயத்தார்களும் அற்புதம் காணச் சூழ்ந்தனர். அமரர் அந்தரத்தில் நிறைந்து நின்றனர். சம்பந்தப்பெருமான் கோபுர வாயிலின் நேரே வந்து நின்றார்; சிவபெருமான் கருணையின் திறத்தை உள்ளத்தில் கொண்டார்; எலும்பு நிறைந்த அக்குடத்தைப் பார்த்தார்; இவ்வுலகத்து மக்கள் இறந்தவர்களின் எலும்பைப் பூசித்தல், நன்னீரிவிடுதல் ஆதியான செயலால், அவ்வெலும்புக்குரியாரை நன்னெறிப்படுத்துகின்றனர். அச்செயல் அவ்வெலும்பிற்கும் நுண்ணுடலினராயிருக்கின்ற அவர்களுக்குமிடையே யுள்ள தொடர்ச்சியினாலேயே நிகழ்கின்றது. இந்நிகழ்ச்சியை அருட் கண்ணால் கண்டார் சம்பந்தர். அவ்வெலும்பிற்குரியாரை திருவருள் உறைப்பால் எண்ணினார். அவ்வளவில் அழகின் இளம் மதியமென வளர்ந்த பூம்பாவையாரே அவர் கண்ணில்பட்டார்; காண்டல் தீக்கை செய்தார். "பூம்பாவாய்" என்றழைத்தார்,

"மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகெ"ன வுரைப்பார்

(பெ. பு. 1087)

உலகில் மக்களாகப் பிறந்தவர், அடைய வேண்டிய பயன், அயரா அன்பினால் அரன்கழல் அடைந்து, ஆரா இயற்கைத்தாகிய பேரின்பம் நுகர்ந்து திளைத்தல். அவ்வின்பத்திற்குரியவராக, வினையை அநுபவித்துக் கழித்து இவ்வுலகில் பிறந்த மக்கள், மீட்டும் பிறவியை அடைந்துவிடாமல், பெறுதற்கரிய அப்பெரும்பயனையே யடைவதற்குச் செய்யவேண்டிய கடமைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று:—சிவனடியார்களைச் சிவனெனவே கருதி, அவர்களோடு கூடிவாழ்ந்து, அவர் கருத்தறிந்து ஏவல் செய்து, கூடிய மகிழ்ச்சியோடு அமுது முதலாயின கொடுத்துப் போற்றுதல். இரண்டாவது:—சிவாலயங்களைச் சிவ

னெனவே தொழுதல்; பெருமான் திருவுருவங்களையும், திருவுருப்பொலிவாக விளங்கும் விழாக்களையும் கண்டு மகிழ்தல். அவையே திருத்தொண்டர்புராண முழுமைக்கும் உள்ளுறையாக அமைந்த பொருள். சிவாகமங்களின் சாரமும், சித்தாந்த சாத்திரங்களின் முடிவும் இவையே. இவை உண்மையாமெனில் உலகவர் முன்வருக என அழைக்கின்றார். இச்செயல் உலகமக்களை அறிவுறுத்தி உய்விப்பதற்காகவே நிகழ்ந்துயின்றாராதலின் 'எம்முன்' என்னாது 'உலகவர்முன் வருக'—என்று கூறுகின்றார். இவற்றையே தம் திருப்பாடல்களால் மேலும் உறுதிப்படுத்துகின்றார் ஞானசம்பந்தர். இவ்விருவகை சிறப்புக்களும் சிறந்து விளங்குகின்றனவாகிய திருவிழாக்களைக் கண்டுகளித்து, சிவனருளில் திளைத்து, அயரா அன்பு செலுத்தி அருட்கடலில் மூழ்க அம்மையாரை அழைக்கின்றார்.

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்!"

என்றார்.

"திருமயிலையில் கோயில் கொண்டருளிய கபாலீச்சரத்தானாகிய சிவபெருமானது அடியவர்க்கு உன் தந்தையார் உணவிடுகின்ற சிறப்பினைக் காணாது போகின்றாயா!" எனப்பாடிய அந்தமுதல் திருப்பாட்டிலேயே குடத்தினுள் உயிர் தரித்தற்குரிய கரு உருக்கொண்டது.

"ஐப்பசி ஓண விழாவும், அருந்தவர்கள்
துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று திருமால் வழிபட்ட ஐப்பசி ஓண விழாவைக் காண அழைத்தபோது கருவிலே பிராண வாயு பொருந்தியது.

"கார்த்திகை நாள் தையலார் கொண்டாடும் விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்"—எனக் கார்த்திகை விளக்குக்காண அழைத்தபோது வடிவு பொலிவுறப் பொருந்தப்பெற்றாள்.

"கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்"

என்று ஐயன் நடனமாடும் ஆதிரை விழாவைக்காண அழைத்தபோது தளர் நடையிடும் பருவமடைந்தாள்.

"நெய்ப்பூசும் ஒள்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணுதே போதியோ பூம்பாவாய்" என்று

நெய்விரவிய சோற்றினை அடியார்க்கு அளிக்கின்ற தைப் பூச விழாவினைக் காண அழைத்தபோது வயது ஐந்தும் பூசப்பெற்ற கொஞ்சும் பருவத்தை அடைந்தார்.

"மாசிக்கடலாட் டுக்கண்டான் அடிகள்பரவி
நடமாடல் காணுதே போதியோ பூம்பாவாய்." என்று

மாசிமாதத்தின் மகநாளில் கடலில் நீராடி, பெருமான் திருவடிகளைப் பரவி அடியார்கள் நடனமாடும் விழாவினைக் காண அழைத்தபோது நடனமாடும் பேதைப் பருவத்தை யடைந்தாள்.

"பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திர நாள்
ஒலிவிழாக் காணுதே போதியோ பூம்பாவாய்" என்று

'உருத்திரபலி என்னும் திக்குபலியுடன், இன்னிசையும் பல்லியங்களும் முழங்கும் பங்குனி உத்திரநாள் விழாக் காணுமல் போகின்ருயோ' எனப் பூம்பாவையை அழைத்த போது உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் கடந்த ஐந்தாண்டு களின் வளர்ச்சியையும் எய்தத்தொடங்கினுள்.

"பண்ணுர் பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்
கண்ணுரக் காணுதே போதியோ பூம்பாவாய்!" என்று

பதினெண் கணங்களும் வழிபடும் அட்டமி விழாவினைக் காண அழைத்தபோது பெதும்பைப்பருவத்தை யடைந் தாள்.

"கற்ருர்கள் ஏத்துங் கபாலீச்சரம் அமர்ந்தான்
பொற்ருப்புக் காணுதே போதியோ பூம்பாவாய்!" என்று

கபாலீச்சரத்தானது பொன்னூசல் விழாவைக் காண அழைத்தபோது பொலிவு முழுதும் பெற்ற பருவமங்கை யானுள்.

"உரிஞ்சாய வாழ்க்கை யமண், உடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள், எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்" என்று

நிலையற்ற கொள்கைகளையுடைய சமண சாக்கியர்களது புறத்துறை அழியும்படியாகத் தொடுத்த வெஞ்சமண் பாட்டைப்பாடி, தூய்மைப்படுத்தும் பெருவிழாவாகிய பெருஞ்சாந்தி விழாவைக் காண அழைத்தபோது, தாமரை மலர் விரிந்ததுபோல் குடம் நெகிழ இலக்குமி எழுந்தாளெனச் செங்கைகாட்டி எழுந்தாள்.

அழகே உருவாய் நின்ற அம்மையாரை அனைவரும் கண்டதிசயித்தனர். அடியவர்களெல்லாம் திருவருட் பெருமையை யுன்னி அரன்நாமம் முழக்கினர். தேவரும் முனிவரும் மலர்மாரி சொரிந்தனர். மண்ணோர் யாவரும், 'இவ்வாறு நிகழ்ந்தது எம்பிரான் கருணை' என வணங்கி விழுந்தனர். கண்டபர சமயத்தாரெல்லாம் அதிசயித்துத் தம் மதத்தை நிராகரித்தனர். எதிலும் ஐயம் கொள்ளும் சமணர்கள் "இச்செய்கை எங்குளது? எவ்வாறு செய்யப் பட்டது? என்றுகூறி, துணியமாட்டாது தள்ளாடி விழ்ந்தனர்.

பூம்பாவையாரின் வனப்பை முடியக்கண்டவர் அங்கு யாருமேயில்லை. கூந்தல் செந்தாமரையை மொய்த்த வண்டுக் கூட்டங்கள் போல் தோன்றியது; கரிய மேகத்தின் கீழிட்ட வானவில்லின் வனப்பைக்கொண்டது நெற்றி; சிவபெருமானின் இரு பெருஞ்சிலைகள் போன்றன புருவங்கள்; கண்ணிணைகள் ஒண்ணிறக்கரிய செய்ய கயலிரண்டொத்துலாவின. பவளநிறமுடைய இந்திரகோபம் என்னும் பூச்சியைக் கவரவரும் பச்சோந்தி போல வாயும் மூக்கும் அழகு காட்டின; மன்மதனது வெற்றிக்கொடிகள் போன்றன காதுகள்; சங்கநிதி பதுமநிதியைத் தாங்குவது போல சங்குவண்ணக் கழுத்தின்மீது பதுமமுகம் அழகு செய்தது. செங்காந்தளாலாகிய மாலையோ? அழகுவழிந்தோடும் இடமோ? என இருநல்லகரங்கள் அழகுகாட்டின;

இத்தகைய பொலிவுகளைப் பெற்று அழகினுக்கு அணியாய் நின்றான் மங்கை.

கண்டார் பதினாறு ஆண்டுபெறும் புகலி வேந்தராம் ஞானசம்பந்தப் பெருமான். எவ்வாறு கண்டார்?

'ஆயிரம் முகத்தாற் கண்டார்'

பூம்பாவையாரின் அழகின் வெள்ளத்தையா கண்டார்? இல்லை பதினாறாண்டு பெற்ற பிள்ளையார் பன்னிரண் டாண்டு நிறைந்தெழுந்த பூம்பாவையாரையேனும் அவரது அழகு நலன்களையேனும் கண்டாரல்லர்; அவ்வழகிற்குக் காரணமாயிருந்த கண்ணுதலின் காணவியலாத கருணை வெள்ளத்தை அவ்வுருவிறகண்டார். அன்பர், அன்புடை யாரை அன்பின் வடிவமாகவும்; அறிஞர்கள், அறிவுக் குரியார்களை அறிவின் வடிவமாகவும்; அடியார்கள் சிவ வேடத்தைச் சிவமாகவும் காண்பது போல, கருணைவள்ள லாகிய சம்பந்தப்பெருமான், சிவபெருமான் கருணையால் தோன்றிய பூம்பாவையாரை சிவபெருமானின் கருணை வடிவமாகவே கண்டார்.

"பரஞானத்தாற் பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பார்; பதார்த்தங்கள் பாரார்"

பரம்பொருளை அறிகின்ற சிறந்த ஞானத்தால் சிவத்தைத் தெளிவாக அறிந்து அன்புசெய்யும் பேறுபெற்ற சீவன் முத்தர்கள், அச்சிவத்தையே உணர்ந்துகொண்டு நிற்பாரே யன்றி, மேலும் ஆகாமிய வினையை யேறச்செய்கின்ற உலகப் பொருட்களைப் பார்க்கமாட்டார்கள். எனவே சம்பந்தப்பெருமான் பூம்பாவையாரின் அழகினைக் காணாது அழகிற்குக் காரணமாகிய இறைவன் கருணைத் திருவுரு வையே கண்டார். கருணைத்திருவுருவம் ஒருமுகத்தாலும், இரு கண்களாலும் காணுதற்குரியதா? எனவே ஆயிரம் திருமுகங்களால் கண்டார். கண்டவரோ பதினாறாண்டு இளைஞர். அவ்வாண்டுகள் 'புண்ணியப் பேர் பெறும் பதினாறாண்டுகள்.' பதினாறாண்டுகள் புண்ணிய வாழ்வு

வாழ்ந்தவர் ஞானசம்பந்தப்பெருமான். சிவபுண்ணிய விளைவாக சிவானந்த வாழ்வுவாழ்ந்தவர், சிவானந்தப் பெருவாழ்விலே திளைத்தபெருமானது கண்களுக்கு கண்ணு தலின் கருணை வெள்ளமல்லாது பாசப்பொருட்களா காட் சியிற்படும்? பூம்பாவையாரின் உருவமும் சிவனருளா லமைந்த புனித உருவமன்றோ? ஆகவே,

> "புண்ணியப் பதினு ரூண்டு பேர்பெறும் புகலிவேந்தர்
> கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார்"

என்றார் சேக்கிழார் பெருமான்.

பிரமன், பாசசம்பந்தமான மாயா காரியமாகிய உடம்புகளைச் சிவ ஆணையின் வழிநின்று படைப்பவன். அவன் பலகாலமாக அத்தொழிலைச் செய்து வருபவன். எண்ணிலா ஆண்டெய்தும் வேதா அவன். ஒருகால் அவன் குறையற்ற அழகுடைய பெண் ஒருத்தியைப் படைக்கக் கருதினான். தான் படைத்த அழகு உருவங்களிலெல்லா மிருந்து திலம் திலமளவாக (எள் அளவு) அழகினை யெடுத்துக்கொண்டான்; உத்தம உருவமொன்று சமைத் தான். திலோத்தமை என்னும் தெய்வப்பெண் தோன்றி னாள். எழில், வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடியது அப்பெண்ணிடம் வயதுபலசென்ற பிரமன் பார்த்தான்; தான் படைத்தவளென்றும் கருதாது, அவளது அழகின் வெள்ளத்தைத் தன் எட்டுக்கண்களாலும் பார்த்துப் பருகினான்; அவளை விரும்பினான். பிரமனை விரும்பாத திலோத்தமை ஓடி மறைந்தாள். பிரமன் தன் நான்கு முகங்களாலும் நான்கு திசைகளிலும் தேடினான்; பய னில்லை.

நான்முகனின் இவ்வியல்பினை எடுத்துக்காட்டி, சேக் கிழார் பெருமான் ஞானப்பிள்ளையின் பெருமையினைப் புலப்படுத்துகின்றார்.

> "எண்ணில்ஆண் டெய்தும் வேதாப் படைத்தவன்
> எழிலின் வெள்ளம்
> நண்ணுநான் முகத்தாற் கண்டான்; அவளினும்
> நல்லாள் தன்பால்

புண்ணியப் பதினா றாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தால்
கண்டார்"

என்று கூறுகின்றார். 'எண்ணிலா ஆண்டெய்தும் வேதா-பதினாறு ஆண்டு பேர்பெறும் புகலி வேந்தர், "இவர்களில் யாருக்கு வயது மிகுதி. சம்பதந்ப் பெருமானுககுத்தான் என்றார் சேக்கிழார். 'எண்,இல் ஆண்டெய்தும் வேதா'—மனிதவருட அளவால் கணக்கிட அளவு கடந்த ஆண்டு களையுடையவன் பிரமன். "எண்ணில்"—பிரம வருடத் தால் எண்ணிப்பார்த்தால், "ஆண்டெய்தும் வேதா"—நூறாண்டு வாழ்பவன் பிரமன்; எவ்வாறெனின், மானிட வருடம் ஒன்று தேவர்களுககு ஒருநாள்; அந்நாள் முன் நூற்றியறுபது கொண்டது ஒரு தேவ யுகம்; தேவயுகம் இரண்டாயிரம் பிரமனுக்கு ஒருநாள், அந்நாள் முந்நூற்றி யறுபது கொண்டது ஒரு பிரமவருடம். அவ்வருடம் நூறு வாழ்பவன் பிரமன, பதினாறாண்டு பேர்பெறும் புகலி வேந்தர், வினைவசத்தால் இறத்தலும் பிறத்தலுமுடைய உயிர் வருக்கத்துட்பட்ட பிரமன் முதலியோர் போலன்றி வினைக்குட்படாதவராகி பண்டே சிவபெருமான் திருவடி நிழலில் வாழும் இயல்புடையவர். இவர் இவ்வுலகில் வினைவயத்தால பிறந்தவரல்லர். வேதநெறி தழைத் தோங்க, மிகுசைவத் துறைவிளங்க, பரசமயமழிந்து மக்கள் சமூகம் சிறந்து விளங்க சிவபெருமானுல் தோற்று விக்கப்பட்ட சாமுசித்தர். பிறப்பு இறப்பு நிலையைக் கடந்தவர். அவரிடத்துப் பதினாறுண்டென்பது, உலகவர் காணக் காட்டும் ஒரு கால அளவேயன்றி வாழ்வின் காலக் கூறுபாடு அன்று. ஆகவேதான் சேக்கிழார், 'பதினா றாண்டு பேர் பெறும் புகலிவேந்தர்; என்றார். காலம் நியதி முதலிய தத்துவங்களையெல்லாம் கடந்த சிவானந்தப் பெரு வாழ்வுடைய பெருமான் நமது பிள்ளையார். அவர் சிவ பெருமானது கருணை வெள்ளத்தையன்றி வேறு எதைக் காண முடியும்?

எலும்பைப் பெண்ணுக்குதல் இயலுமா? எனச் சிலர் உள்ளங்களில் ஐயம் எழலாம். இது தெளிவிலார்

உள்ளங்களில் எழும் ஒரு ஐயம். ஞானசம்பந்தப்பெருமானுடைய பெருமையினையுணர்ந்தவர் உள்ளங்களில் அத்தகைய தோரையம் எழாது. சிவபெருமான் கருணைத்திறத்தையுள்ளவாறு உணர்ந்தோருள்ளங்களில், அத்தகையதோர் ஐயம் எழவேயெழாது. அண்ட சராசரங்களையும் படைத்துக், காத்து, ஒடுக்கி அருள்செய்யும் அம்பலவாணன் திருவருளால் ஆகாதது என்ன? அத்திருவருளைப் பெற்று உலகிற்களிக்கும் ஆற்றலுடையவர் சம்பந்தப்பெருமான். மூன்றுமாண்டிலே சிவபெருமான் திருவருளால், 'உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும்' பெற்றவர் அவர். மெய்ஞ்ஞானத்தால் இறைவன் திருவருளைப் பெற்று அதனைக் கலைஞானத்தால் உலகுக்களிக்கும் பேறுவாய்க்கப்பெற்றவர் ஞானசம்பந்தப் பெருமான். எனவே இறைவன் திருக்கருணையை உலகறிந்து உய்ய இச்செயலைப் பூம்பாவையார் பால் நிகழ்த்துகின்றார். சம்பந்தப்பெருமான், சிவநேசர் செய்த செயலைக் கேட்டவுடனே, இறைவன் கருணையையே யெண்ணி மகிழ்ந்தார். இறைவன் கருணைத் திறத்தை உலகுக்கறிவித்து உலகுய்யச் செய்யவே அவ்வாறு நிகழ்ந்ததாகக் கருதினார். எனவே கபாலீச்சரத்து அமுதை மெய்யருள் திறம்பெறும் பரிவுடன் வணங்கி, அவ்வருள் சிவநேசர் பால் பாலிக்குமாறு செய்தார், அவர் குடம் கொண்டு வந்து வைத்ததும் தம்பிரான் பெருமையைக் கருதி 'பூம்பாவாய்' என அழைக்கின்றார். சிவனருளிய சிவாகமத்தின் உட்பொருளாகிய அடியார்பூசை, ஆலய வழிபாடு இரண்டின் பேரிலும் ஆணையிட்டு அழைக்கின்றார். பூம்பாவையார் தோன்றியகாலத்திலும், பூம்பாவையாரைக் காணாது, அவள் தோன்றக்காரணமாயிருந்தசிவபெருமான் கருணையின் பெருக்கையே காண்கின்றார். சிவனருள் திறத்தில் நம்பிக்கையும் உறைப்பும் வழிபாடும் உடையவர்க்குப்பூம்பாவையாரின்எழுச்சி ஐயப்பாடுடையதாகவோ அற்புதமாகவோ தோன்றாது; சிவபெருமான் கருணைப் பெருக்கின் ஒரு திவலையேயிது எனத்தோன்றும்.

இனி சாத்திர அடிப்படையில் ஒருசிறிது ஆராய்வோம். 'உள்ளதற்குத்தோற்றமேயொழிய இல்லத்தற்

குத் தோற்றமில்லை' யென்பது சாத்திரம். நாம் கண்டும், கேட்டும், முகர்ந்தும், சுவைத்தும் தொட்டும் அநுபவித்தும் வருகின்ற இவ்வுலகம் பாசப்பொருள். அது என்றும் உள்ள பொருளேயொழிய இல்லாத வெளித் தோற்றமன்று. காரணநிலையில் நுண்பொருளாக ஒடுங்கியும் காரியநிலையில் பருப்பொருளாக விரிந்தும் தோற்றுவது. இத்தகைய நிலை மாறுதலுடைமையால் அது மாயை எனப்படுகிறது. இம்மாயையின் காரியநிலையே விண், வாயு, தீ, நீர், மண் என்னும் ஐம்பூதங்கள். இவை முறையே ஒன்றிலிருந்து மற்றொன்றாகத் தோன்றியவை; ஒன்றிற்கொன்று பருமையானவை, இவற்றின் கூட்டுச்சேர்க்கையே நாம் அநுபவித்து வரும் உலகம். உலகப் பொருட்களின் வேறுபாடுகள் இப் பஞ்சபூதச் சேர்க்கையின் ஏற்றத் தாழ்விற்கேற்ப அமைகின்றன. எனவே உலகப்பொருட்கள் நிலை மாறும்போது அவற்றின் பகுதிகள் அவ்வப்பூதங்களோடு கலந்துவிடுகின்றன. உடலில் உயிர் பிரிந்து உடலழிக்கப்படுகின்ற காலத்தில், உடலில் அமைந்த பஞ்சபூதப் பகுதிகள் பிரிக்கப்பட்டு அவ்வப்பூதங்களோடு கலக்கின்றன. நீரியல்பும் மண் இயல்புமுடையதும் பருத் தன்மையுடையதுமான எலும்பும் சாம்பலும் கண்ணுக்குப் புலனாகக் கிடக்கின்றன.

பாசப்பொருளுக்கு அப்பாற்பட்டது. பசு எனப்படும் உயிர். அது நிலைமாறாத தன்மையுடையது; ஆணவம் எனப்படும் மலத்தொடர்பினால் அறியாமை வயப்பட்டுக் கிடப்பது. அம்மல நீக்கத்தின் பொருட்டு, உயிர், பாசப் பொருளாகிய உடலோடு பதியெனப்படும் இறைவனால் கூட்டுவிக்கப்படுகிறது. ஒரு உடல் அழிந்த காலத்து வினைக்கேற்பப் பின்னுமொரு உடலோடு கூட்டுவிக்கப்படுகிறது. மனித உடலோடு செயலாற்றிய ஓர் உயிர், அப்பருவுடல் நீத்தகாலத்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களோடு கூடிய நுண்ணுடலோடு சிலகாலம் உறைந்து வினை நுகர்தலும் உண்டு. அதன் பின் வினைநீங்கிய உயிர் மலபரிபாகம் எய்த இறைவனைச்சார்தலும், வினை நீங்காதவை வினைக்கேற்பப் பருவுடலைச்சார்தலும் இயல்பு.

(தொடரும்)

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தின் சார்பில் காஞ்சிச் [சி]வதல வாரவழிபாடு 31—5—70, 28—6—70 நாள்[க]ளிலும் மாணிக்கவாசகர் விழா 7—7—70-ல் திருவேகம்[ப]த்திலும் திருக்கழுக்குன்றத்திலும் மெய்கண்டார் ஆனிச் சுவாதி விழா 13—7—70 ஆம் நாளும் நிகழ்ந்தது. புலவர் மாமணி வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்களும் K. இராமநாதன் அவர்களும் விரிவுரையாற்றினர்.

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் சார்பில் ஐந்தாவது சேக்கிழார் விழா 8—6—70, 9—6—70ல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மிகச்சிறப்புற நிகழ்ந்தது. சைவப்பெருமக்கள் பலர் பெரியபுராணத்தின் சிறப்பைப் பலகோணங்களில் ஆய்ந்து விரிவுரையாற்றினர். தமிழ்நாட்டிலிருந்து நம்சமாஜ முன்னாள் தலைவர் திரு. நல். முருகேச முதலியார் B. A., அவர்களும் கலந்து இருநாள்களிலும் சொற்பெருக்காற்றினர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் திரு. நல். முருகேச முதலியார் B. A., அவர்கள் 8—6—70 முதல் 16—6—70 முடிய இலங்கையில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு முதலிய பல இடங்களுக்குச் சென்று பெரியபுராணத்தின் சிறப்பையும் நம் சைவ சித்தாந்தத்தின் சிறப்பையும் பல்வேறு தலைப்புக்களில் விரிவுரை யாற்றியது மிகவும் பாராட்டத்தக்கது. 13—6—70 அன்று இலங்கை வானொலி நிலையத்தாருடனும் பேட்டி அளித்து சைவசித்தாந்தம் இக்காலத்துக்குத் தேவையான தத்துவம் என்பதுபற்றிப் பேசினார்கள். அவர்கள் இது போன்று பலமேனாடுகளுக்கும் சென்று நம்சமயப் பெருமையைப் பரப்பித் தொண்டு புரிய இறைவன் அருள்புரிவானாக.

புன்செய்ப்புளியம்பட்டி மறைமலையடிகள் மன்ற 12-ஆம் ஆண்டு நிறைவுவிழா 21—6—70 முற்பகல் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. அன்று பிற்பகலில் அவ்வூர் அருள்நெறி மன்றத்தின் சார்பில திருவள்ளுவர் ஈராயிரத்தாட்டை நிறைவு விழா நிகழ்ந்தது. அறிஞர் பலர் பங்கேற்று திருக்குறளைப் பல கோணங்களில் ஆராய்ந்து பேசினர்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான்சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற திருவாசகப் பிரசங்கநிதிக் கட்டளைப்படி 3—7—70 முதல் 7—7—70 முடிய சிதம்பரம் நடராசப் பெருமான் திருக்கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் திருவாசகத்தில் 5 பிரசங்கங்கள் நிகழ்ந்தன. சிறந்த அறிஞர்கள் ஐவர் சொற்பெருக்காற்றினர்.

வட நாட்டு யாத்திரை

சைவத்திருவாளர் திரு. சிவநேயன் அவர்கள் தலைமையில், மகளிர் உட்பட 12 சைவ அன்பர்கள் 17—7—70 ஆம் நாளிலிருந்து 40-நாட்களுக்கு வடஇந்திய யாத்திரை செய்ய இருக்கிறார்கள். ஸ்ரீ சைலம், பூரி, கல்கத்தா, காசி, அயோத்யா, ஸ்ரீநகர், டெல்லி, ஆக்ரா, பாம்பே, கோவா, முதலிய இடங்களுக்குச் செல்வார்கள். தனி உயர்தர (டிலக்ஸ்) பேருந்து வசதி செய்யப்படுகிறது. பேருந்தில் இன்னும் 6 பேர்களுக்கு இடம் உள்ளது. ஆளுக்கு ரூ 1500 செலவாகும். இந்த யாத்திரையில் சேர்ந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் உடனே சமாஜச் செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

சமாஜச் செயலாளர்

குன்றத்தூர் சேக்கிழார் பெருமான் திருக்கோயில் திருப்பணிக்குழு ஒன்று 10—6—70 அன்று உயர்திரு M. சந்திரசேகர முதலியார் J P. அவர்கள் தலைமையில் உருவாகியுள்ளது. அறநிலைய ஆட்சித்துறை ஆணையர், தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோரும் உறுதுணை புரிய முன்வந்துள்ளார்கள். அது பாராட்டத்தக்கது. அப்பெருங்கோயில் சிறந்து விளங்கின் சைவத்தின் சிறப்பு, திருமுறையின் பெருமை முதலியன வெல்லாம் தாமே மேலாக விளங்கித் தோன்றுதல் வெள்ளிடைமலை. ஆகவே அம்முயற்சி வெற்றிபெற இறைவன் அருள்புரிய வேண்டித் துதிக்கின்றோம்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் திருக்கழுக்குன்றத்தில் ஆனிமகத் திருமுறை இன்னிசை வெள்ளி விழா 4—7—70 முதல் 7—7—70 முடிய மிகச் சிறப்புற நிகழ்ந்தது. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் திருப்பெருந் திரு சோமசுந்தர தேசிக பரமாசிரியர், தவத்திரு குருகுலம் அழகரடிகளார், திருப்போரூர் சிதம்பர சிவஞான சுவாமிகள் ஆகிய முனியுங்கவர்களும் மற்றும் புலவர் பெருமக்கள் பலரும் கலந்து விழாவைச் சிறக்கச் செய்தார்கள். தருமபுரம் பி. சுவாமிநாதன் புதுவை ஆ. விநாயக முதலியார் திருமுறை இசையரங்கும் நிகழ்ந்தது.

கோத்தட்டை உயர்திரு— ச. முத்துக்குமரசாமி பிள்ளை அவர்கட்கு 10—7—70 அன்று மணிவிழா சிறப்பாக நிகழ்ந்தது. மணிவிழாத் தம்பதிகள் இறையருளால் எல்லா நன்னலங்களும் பெற்று இன்னும் ஒருநூற்றாண்டிருந்து சமயத் தொண்டு புரிய ஆடல்வல்லான் அருள்பாலிக்க வேண்டி வணங்குகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.